இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 19-12-2024

# பலம் இல்லாததால் பதுங்கல்!

சந்திரபாபு நாயுடு - நிதிஷ்குமார் ஆகியோரின் இரவல் உதவி காரணமாகத் தான் பிரதமர் பதவியில் நரேந்திர மோடி இருக்கிறார், அவரால் நினைத்ததைச் செய்ய முடியாது என்று தொடர்ந்து நாம் சொல்லி வந்தோம். 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' சட்ட மசோதாவில் அது தெரிந்து விட்டதா?

நாடாளுமன்றத்தில் ஒரு மசோதாவை தாக்கல் செய்து அதனை நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மை பலம் இருந்தால் போதுமானது. அதேநேரத்தில் அரசியல் சாசனம் தொடர்பான மசோதாவாக இருந்தால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தனிப்பட்ட முறையில் பா.ஜ.க.வுக்கு இல்லை. கூட்டணியாகச் சேர்ந்தாலும் இல்லை.

**நாடாளுமன்றத் தேர்தலுடன் அனைத்து மாநில சட்டசபைக்கும், யூனியன் பிரதேச சட்டசபைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வழிவகை செய்யும் அரசமைப்புச் சட்ட (129-ஆவது திருத்தம்) மசோதா 2024 மற்றும் யூனியன் பிரதேசம் சட்ட (திருத்தம்) மசோதா 2024 ஆகியவை மக்களவையில் நேற்றைய தினம் (டிசம்பர் 17) தாக்கல் செய்யப்பட்டது.** ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்துக்காக அரசியல் சாசனத்தில் 82, 83, 172 மற்றும் 327 ஆகிய 4 பிரிவுகளில் மொத்தம் 17 திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

**இந்த மசோதாவை மக்களவையில் அறிமுகம் செய்வது தொடர்பான வாக்கெடுப்பின் முடிவுகளை மக்களவை சபாநாயகர் அறிவித்தார். இந்த மசோதாவிற்கு ஆதரவாக 269 வாக்குகளும், எதிராக 196 வாக்குகளும் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 'ஒரே நாடு ஒரே தேர்தல்' தொடர்பான மசோதாவை சட்ட அமைச்சர் அர்ஜூன் ராம் மேக்வால் தாக்கல் செய்தார்.**

**'ஒரே நாடு ஒரே தேர்தல்' தொடர்பான மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா "அரசியலமைப்பை மாற்றக் கோரும் இந்த மசோதா மத்திய அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டபோது, இந்த மசோதாவை நாடாளுமன்றக் கூட்டுக்குழுவிற்கு** (Joint Parliamentary Committee- **ஜே.பி.சி.) அனுப்ப வேண்டும் என பிரதமர் மோடி தனது கருத்தை வெளிப்படுத்தினார்." என்று சொன்னார்.**

**பிரதமர் மோடி ஏன் அப்படிச் சொன்னார் என்றால், தனது பலவீனத்தை மறைக்கவே அப்படிச் சொன்னார்.**

மக்களவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 543. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' மசோதாவை நிறைவேற்ற மொத்தம் 362 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. ஆனால் மக்களவையில் பா.ஜ.க. கூட்டணிக்கு 293 எம்.பி.க்கள் மட்டுமே உள்ளனர். இந்தியா கூட்டணிக்கு 249 எம்.பி.க்கள் உள்ளனர். இவர்கள் தவிர ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் , சிரோன்மணி அகாலி தளம் மற்றும் சுயேட்சைகள் என 11 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்தியா கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' மசோதாவை எதிர்ப்பதால், எந்தக் கூட்டணியிலும் இல்லாத 11 உறுப்பினர்கள் ஆதரவு அளித்தாலும் கூட, 'ஒரே நாடு ஒரே தேர்தல்' மசோதாவை மக்களவையில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் நிறைவேற்ற முடியாது.

அதேபோல், மாநிலங்களவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 245. இதில், 8 இடங்கள் காலியாக உள்ளன. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை மாநிலங்களவையில் நிறைவேற்ற மொத்தம் 158 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. ஆனால், மாநிலங்களவையில் பா.ஜ.க. கூட்டணிக்கான ஆதரவு 125 எம்.பி.க்கள் மட்டுமே. மாநிலங்களவையில் இந்தியா கூட்டணிக்கு 112 உறுப்பினர்கள் உள்ளனர்.

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சிக்கு 8 உறுப்பினர்கள், பிஜு ஜனதா தளம் கட்சிக்கு 7 உறுப்பினர்கள், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சிக்கு 4 உறுப்பினர்கள், அ.தி.மு.க.வுக்கு 3 உறுப்பினர்கள், பகுஜன் சமாஜ், மிசோ தேசிய முன்னணி கட்சி ஆகியவற்றுக்கு தலா ஒரு உறுப்பினர் என மற்றவைகளாக 24 உறுப்பினர்கள் உள்ளனர். ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு அளித்தாலும் கூட மசோதாவை நிறைவேற்றுவது என்பது சாத்தியமில்லை.

**'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதா வாக்கெடுப்பின்போது மக்களவையில் 20க்கும் மேற்பட்ட பா.ஜ.க. எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை. வாக்கெடுப்புக்கு முன்னதாக அனைத்து எம்.பி.க்களிடமும் கட்டாயம் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. அந்த உத்தரவின்படி அனைத்து எம்.பி.க்களும் கட்டாயம் அவையில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் 20க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் அவையில் இல்லாதது பா.ஜ.க. தலைமையை அதிருப்தி அடைய செய்து இருப்பதாகக் கூறப்படுகிறது. 'எப்படியும் நிறைவேற்ற முடியாது' என்று அவர்களுக்கே தெரிந்து அலட்சியமாக இருந்துவிட்டார்கள் போலும்.**

இதனை உணர்ந்தே, மசோதாவை தாக்கல் செய்த உடனேயே நாடாளுமன்றக் கூட்டுக் குழு ஆய்வுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அனுப்பி இருக்கிறது. தனது பலவீனத்தை மறைக்கும் வகையில் கூட்டுக்குழு ஆய்வை பயன்படுத்திக் கொண்டது பா.ஜ.க.

பலம் இல்லாததால் பதுங்கி விட்டது பா.ஜ.க.!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.12.2024) முகாம் அலுவலகத்தில், பிரின்ஸ் ஜுவல்லரியின் நிர்வாக இயக்குநர் பிரின்சன் ஜோஸ் மற்றும் அவரது மனைவியும் இயக்குநருமான திருமதி ஷீபா பிரின்ஸ் ஆகியோர் கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் க. அன்பழகன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# ஈரோடு மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

## இன்று நடைபெறுகிறது!

**ஈரோடு, டிச. 19-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டம்தோறும் கள ஆய்வு செய்து அரசு விழாவில் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார். கட்சி நிர்வாகிகளைச் சந்தித்து கட்சி வளர்ச்சி குறித்து பேசி வருகிறார்.**

அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்துக்கு 19ந்தேதி, 20ந் தேதி என 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இன்று 19ந் தேதி (வியாழக்கிழமை) சென்னையில் இருந்து காலை 10 மணி அளவில் இருந்து விமானம் மூலம் கோவை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அங்கிருந்து சாலை வழியாக ஈரோட்டுக்குச் செல்கிறார். அங்கு 20க்கும் மேற்பட்ட இடங் களில் முதலமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது. பின்னர் மதியம் 1 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு விருந்தினர் மாளிகைக்கு சிறிது ஓய்வு எடுக்கிறார்.

பின்னர் மாலை 5 மணி அளவில் மேட்டுக்கடை பகுதியில் தங்கம் மகாலில் நடக்கும் தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். மாலை 6 மணி அளவில் தி.மு.க. கொள்கை பரப்பு இணைச்செயலாளர் சந்திரக்குமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்கிறார். இரவில் ஈரோடு விருந்தினர் மாளிகையில் தங்குகிறார்.

அதைத்தொடர்ந்து நாளை 20ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு ஈரோடு சோலார் புதிய பஸ் நிலையத்தில் நடக்கும் அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார். ஏற்கனவே முடிக்கப்பட்ட வளர்ச்சித்திட்ட பணிகளை திறந்து வைப்பதுடன், புதிய வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கிறார்.

ஈரோடு சூரம்பட்டி நால்ரோட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் ரூ.16 கோடி செலவில் கட்டப்பட்ட 6 தளங்கள் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகம், ஈரோடு பஸ் நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகம், நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தப் பட்ட வெளிவட்ட சுற்றுச்சாலை (ரிங்ரோடு), ஈரோடு வைராபாளையத்தில் அமைக்கப்பட்ட கூடுதல் உரக்கிடங்கு, சென்னிமலையில் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

சோலாரில் ரூ.18 கோடியே 48 லட்சம் செலவில் கட்டப்பட உள்ள காய்கறி, பழங்கள், மளிகை என மொத்த சந்தை வளாகம் கட்டும் பணியை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து பல்வேறு துறைகளின் சார்பில் சுமார் 50 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார்.

முதலமைச்சர் வருகையை முன்னிட்டு அமைச்சர் முத்துசாமி, மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் அதிகாரிகள் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

"குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு

# "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்திற்கு மேலும் ரூ.400 கோடி ஒதுக்கீடு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.19-**

**"கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் மேலும் ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

"கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/ வீதம் மொத்தம் ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 இலட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக "அனைவருக்கும் வீடு" என்ற கணக்கெடுப்பின் வழியாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நடப்பு நிதியாண்டில் (2024-25) ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு, சமையலறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் TANCEM சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது.

வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal AccountSNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசால் ரூ.1051.34 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.860.31 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.135.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.995.61 கோடி இது வரை கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளும் விரைவாக கட்டப் பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, வீடுகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு மேலும் ரூ.400 கோடி விடுவித்து ஆணை வழங்கியுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள ரூ.400 கோடியும் சேர்ந்து மொத்தம் ரூ.1451.34 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் 6-வது கேரம் போட்டி!

# பதக்கங்களை வென்றவர்களுக்கு ரூ.2 கோடிக்கு காசோலை!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, டிச. 19 -*

*சென்னையைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் மெகபூப் பாஷா என்பவரின் மகள் செல்வி.எம்.காசிமா தேனாம்பேட்டை மகளிர் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்று வருகின்றார். தனது தந்தையின் வருமானத்தில் கேரம் விளையாட்டில் ஆர்வத்துடன் மாநில மற்றும் இந்திய அளவில் பல்வேறு போட்டிகளில் வென்று சாதனை படைத்துள்ள இவர் கடந்த 2024 நவம்பர் மாதம் 11 முதல் 17 வரை அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற 6வது உலக கேரம் போட்டியில் கலந்து கொள்ள நிதியுதவி கோரி தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையில் விண்ணப்பித்து இருந்தார். இவருடன் மேலும் 2 வீராங்கனைகள் ஒரு பயிற்சியாளருடன் அமெரிக்கா செல்ல நிதியுதவி கோரி விண்ணப்பித்து இருந்தார்கள்.*

*இந்த போட்டியில் கலந்து கொள்ள 3 வீராங்கனைகள் மற்றும் 1 பயிற்சியாளருக்கு தலா ரூ.1,50,000/ வீதம் மொத்தம் ரூ.6,00,000/ க்கான நிதியுதவியை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் கீழ் வழங்கியிருந்தார்கள். இந்த நிதியின் மூலம் அமெரிக்காவில் நடைபெற்ற கேரம் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று தங்கப்பதக்கம் உள்ளிட்ட பல்வேறு பதக்கங்களை தமிழ்நாட்டு வீராங்கனைகள் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தார்கள்.*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2024) அமெரிக்காவில் நடைபெற்ற 6வது உலக கேரம் போட்டியில் தனிநபர், இரட்டையர் பிரிவு மற்றும் குழு போட்டியில் தலா ஒரு தங்க பதக்கம் வென்ற செல்வி.எம். காசிமா அவர்களுக்கு சிறப்பு ஊக்க தொகையாக ரூ.1.00 கோடியும், இரட்டையர் பிரிவு மற்றும் குழு போட்டியில் தலா ஒரு தங்க பதக்கம் வென்ற செல்வி.வி.மித்ரா அவர்களுக்கு சிறப்பு ஊக்க தொகையாக ரூ.50.00 லட்சமும், குழு போட்டியில் ஒரு தங்கம் மற்றும் இரட்டையர் பிரிவில் ஒரு வெள்ளி பதக்கம் வென்ற செல்வி.கே.நாகஜோதி அவர்களுக்கு சிறப்பு ஊக்க தொகையாக ரூ.50.00 லட்சமும் என சிறப்பு உயரிய ஊக்க தொகையாக மொத்தம் ரூ. 2.00 கோடிக்கான காசோலைகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி அவர்கள் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் "நீலகிரி வரையாடு எண் முத்திரை மற்றும் நீலகிரி வரையாடு அறிக்கை 2024 முதல் ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்பு அறிக்கையினை வெளியிட்டார். உடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (வனத்துறைத்தலைவர் சீனிவாஸ் ரா.ரெட்டி, மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனஉயிரினகாப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, ஆகியோர் உள்ளனர்.